**செய்தி வெளியீடு எண்: 831** **நாள்: 14.11.2018**

**செய்தி வெளியீடு**

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. எடப்பாடி கே. பழனிசாமி அவர்கள் இன்று (14.11.2018) சென்னை, எழும்பூர், குழந்தைகள் நல நிலையம் மற்றும் குழந்தைகள் அரசு மருத்துவமனையில் 35 கோடியே 46 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள, நவீன இருதய சிகிச்சை மையத்தின் தோரண நுழைவு வாயில், நவீன இருதய சிகிச்சை அறுவை அரங்கம் மற்றும் தீவிர சிகிச்சைப் பிரிவு, சிகிச்சைக்கு வரும் குழந்தைகளின் பெற்றோர்கள் மற்றும் உறவினர்கள் அமர்வதற்கான நவீன ஒலி–ஒளி அரங்கம், குழந்தைகள் மரபணு மற்றும் மூலக்கூறு ஆய்வகம் மற்றும் அரிய மரபணு குறைபாடு சிகிச்சைத் துறை ஆகியவற்றை திறந்து வைத்தார்கள். மேலும், 1 கோடி ரூபாய் செலவில் பச்சிளம் குழந்தைகளுக்கான தைராய்டு பரிசோதனை திட்டத்தை தொடங்கி வைத்து, அரசு குழந்தைகள் நல மருத்துவமனையின் பொன்விழா ஆண்டுக்கான நினைவு அஞ்சல் அட்டையை வெளியிட்டார்கள்.

மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் வழியில் செயல்படும் தமிழ்நாடு அரசு, உலகத் தரம் வாய்ந்த மருத்துவ சிகிச்சையை தமிழக மக்களுக்கு அளிக்கும் பொருட்டு, சுகாதாரக் கட்டமைப்பை வலுப்படுத்துதல், ஆரம்ப சுகாதார நிலையங்களில் 24 மணி நேரமும் தாய்சேய் நல சேவைகளை வழங்குதல், 30 படுக்கை வசதிகள் கொண்ட மேம்படுத்தப்பட்ட ஆரம்ப சுகாதார நிலையத்தை ஒவ்வொரு வட்டாரத்திலும் துவக்குதல், தேவைக்கேற்ப புதிய ரத்த வங்கிகளை ஏற்படுத்துதல், 108 அவசரகால ஆம்புலன்ஸ் சேவையை வலுப்படுத்துதல், 104 மருத்துவ தகவல் சேவை திட்டம், முதலமைச்சரின் விரிவான மருத்துவக் காப்பீட்டுத் திட்டம், கூடுதல் நிதி உதவியுடன் டாக்டர் முத்துலெட்சுமி ரெட்டி மகப்பேறு நிதியுதவித் திட்டம், அம்மா குழந்தை நல பரிசு பெட்டகம், அம்மா மகப்பேறு சஞ்சீவி, அம்மா முழு உடல் பரிசோதனைத் திட்டம், தாய்ப்பால் வங்கி போன்ற பல்வேறு முன்னோடித் திட்டங்களை சீரிய முறையில் செயல்படுத்தி வருகிறது.

சென்னை, எழும்பூர், அரசு குழந்தைகள் நல மருத்துவமனை 1968–ஆம் ஆண்டு 250 படுக்கைகளுடன் தொடங்கப்பட்டு, தற்போது 837 படுக்கைகளுடன் தெற்கு ஆசியாவின் மிகப் பெரிய குழந்தைகள் மருத்துவமனையாக செயல்பட்டு வருகிறது. இம்மருத்துவமனையில் எம்.டி. (குழந்தைகள் நலம்), எம்.சி.எச்., டி.எம் (நியோநேடாலஜி) மற்றும் டி.சி.எச். ஆகிய மருத்துவப் படிப்புகளில் ஆண்டுதோறும் 69 மாணவர்கள் படித்து பட்டம் பெற்று வருகின்றனர். இந்த மருத்துவமனையில் தமிழ்நாட்டில் மட்டுமின்றி அண்டை மாநிலங்களிலுள்ள குழந்தைகளும் சிகிச்சை பெற்று செல்கின்றனர். ஜப்பான் பன்னாட்டு கூட்டுறவு முகமை, இம்மருத்துவமனைக்கு மருத்துவ உபகரணங்களை

வழங்கியதோடு, 90.09 கோடி ரூபாய் மதிப்பீட்டில் நவீன புற நோயாளிகள் பிரிவுக் கட்டடத்தை கடந்த ஆண்டு கட்டித் தந்துள்ளது.

இந்த குழந்தைகள் நல மருத்துவமனையில் உள்ள குழந்தைகள் இருதயத் துறை, ஒரு முன்னோடியான துறையாக செயல்பட்டு வருகிறது. தமிழ்நாட்டில் இருதய உள்ளூடுருவி ஆய்வகம் கொண்ட முதல் துறையும் இதுவே ஆகும். இம்மருத்துவமனையில் ஆண்டுதோறும் சுமார் 12,000 குழந்தைகள் இருதய புறநோயாளிகள் பிரிவில் சிகிச்சை பெற்று வருகின்றனர். இருதயத் துறையில் உள்ள இரண்டு பிரிவுகளிலும் 20 படுக்கைகள் உள்ளன. இங்கு 250–க்கும் மேற்பட்ட குழந்தைகளுக்கு சிகிச்சை அளிக்கப்படுகிறது. இங்கு இருதய உள்ளூடுருவி ஆய்வகம் 2016–ஆம் ஆண்டு தொடங்கப்பட்டு இதுவரை 180 குழந்தைகளுக்கு இருதய உள்ளூடுருவி மூலம் அறுவை சிகிச்சையின்றி சிகிச்சை அளிக்கப்பட்டுள்ளது.

இந்த நவீன இருதய சிகிச்சை மையத்திற்கு 6 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள தோரண நுழைவு வாயில்; 25 கோடி ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள நவீன இருதய சிகிச்சை அறுவை அரங்கம் மற்றும் தீவிர சிகிச்சைப் பிரிவு; இம்மருத்துவமனைக்கு சிகிச்சைக்கு வரும் குழந்தைகளின் பெற்றோர்கள் மற்றும் உறவினர்கள் சுமார் 250 நபர்கள் வரை அமர்வதற்கும், குழந்தைகளுக்கான பல்வேறு பயனுள்ள நிகழ்ச்சிகள், குழந்தைகள் கண்டு களிக்க கார்ட்டூன் படங்கள் மற்றும் நல்லொழுக்கம் பேணும் குறும்படங்கள் ஆகியவற்றை கண்டு களிக்கும் வகையிலும் 40 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள நவீன ஒலி–ஒளி அரங்கம்; 10 கோடி ரூபாய் மதிப்பீட்டில் அமைக்கப்பட்டுள்ள குழந்தைகள் மரபணு மற்றும் மூலக்கூறு ஆய்வகம் மற்றும் அரிய மரபணு குறைபாடு சிகிச்சைத் துறை;

என மொத்தம் 35 கோடியே 46 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் குழந்தைகள் நல நிலையம் மற்றும் குழந்தைகள் அரசு மருத்துவமனையில் கட்டப்பட்டுள்ள கட்டடங்களை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. எடப்பாடி கே. பழனிசாமி அவர்கள் இன்று திறந்து வைத்தார்கள்.

மேலும், 1 கோடி ரூபாய் செலவில் மரபியல் நோய்கள் மற்றும் வளர்சிதை மாற்ற நோய்களை ஆரம்ப நிலையிலேயே கண்டறிந்து சிகிச்சை அளிக்க வகை செய்யும், பச்சிளம் குழந்தைகளுக்கான தைராய்டு பரிசோதனைத் திட்டத்தையும் துவக்கி வைத்தார்கள்.

இதுமட்டுமின்றி, எழும்பூர் அரசு குழந்தைகள் நல மருத்துவமனை தொடங்கி 50 ஆண்டு நிறைவடைந்து 2018–ஆம் ஆண்டு பொன்விழா கொண்டாடப்பட்டு வருகிறது. இந்த பொன்விழா ஆண்டு நினைவு அஞ்சல் அட்டையை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. எடப்பாடி கே. பழனிசாமி அவர்கள் இன்று வெளியிட்டார்கள்.

முதலமைச்சரின் விரிவான மருத்துவக் காப்பீட்டுத் திட்டத்தின் கீழ், பிறவியிலேயே இருதய குறைபாடு உள்ள 25,285 குழந்தைகளுக்கு 191 கோடி ரூபாய் காப்பீட்டுத் தொகையில் இருதய அறுவை சிகிச்சை செய்யப்பட்டுள்ளது. மேலும், முதலமைச்சரின் விரிவான மருத்துவக் காப்பீட்டுத் திட்டத்தின் கீழ், அப்பல்லோ மருத்துவமனையுடன் தமிழ்நாடு அரசு புரிந்துணர்வு ஒப்பந்தம் செய்து கொண்டு, சிக்கலான இருதய குறைபாடுள்ள குழந்தைகளுக்கு இருதய அறுவை சிகிச்சைகள் வெற்றிகரமாக செய்யப்பட்டது. இதனை பாராட்டும் விதமாக, அப்பல்லோ மருத்துவமனையின் இருதய அறுவை சிகிச்சை நிபுணர்களுக்கு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.எடப்பாடி கே.பழனிசாமி அவர்கள் இன்று நினைவுப் பரிசு வழங்கினார்கள்.

அத்துடன் இந்த நிகழ்ச்சியின் போது, எழும்பூர், அரசு குழந்தைகள் நல மருத்துவமனையில் இருதய அறுவை சிகிச்சை செய்து கொண்டு நலமுடன் வாழும் மழலைகள், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கு மலர்க்கொத்து வழங்கி தங்கள் நன்றியினை தெரிவித்துக் கொண்டனர். அக்குழந்தைகளுக்கு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் பரிசுகளை வழங்கினார்கள்.

இந்த நிகழ்ச்சியில், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.எடப்பாடி கே.பழனிசாமி அவர்கள் ஆற்றிய உரை:

‘‘இந்த சிறப்பான நிகழ்ச்சியிலே கலந்து கொண்டுள்ள மாண்புமிகு துணை முதலமைச்சர் மற்றும் மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்களுக்கும், மாண்புமிகு அமைச்சர் பெருமக்களுக்கும், இந்த நிகழ்ச்சியிலே பங்கு பெற்றிருக்கின்ற மாண்புமிகு சட்டப்பேரவை மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கும், முன்னாள் சட்டப்பேரவை மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கும், முன்னாள் அமைச்சர்களுக்கும், வாரியத் தலைவர்களுக்கும் பல்வேறு மருத்துவமனையிலிருந்து வருகை தந்து சிறப்பித்த மருத்துவர்களுக்கும், இந்த மருத்துவமனையில் பணிபுரிந்து கொண்டிருக்கின்ற மருத்துவர்கள், செவிலியர்கள் மற்றும் இந்த மருத்துவமனையிலே சிறப்பான முறையிலே பணியாற்றிக் கொண்டிருக்கின்ற அனைத்து ஊழியர்களுக்கும்,

வருகை தந்துள்ள பெரியோர்களுக்கும், தாய்மார்களுக்கும், இங்கே அறுவை சிகிச்சை பெற்று நலமுடன் நம் முன்னாலே அமர்ந்திருக்கின்ற நம்முடைய குழந்தைச் செல்வங்களுக்கும், அவர்களுடைய பெற்றோர்களுக்கும், ஊடக நண்பர்களுக்கும், பத்திரிகை நண்பர்களுக்கும் என்னுடைய முதற்கண் வணக்கத்தை தெரிவித்துக் கொள்கிறேன்.

இன்றைய தினம் குழந்தைகள் தின விழா, அந்த நன்னாளிலே இந்த மருத்துவமனையை நாம் திறந்திருக்கின்றோம். இது ஒரு மகிழ்ச்சியான நிகழ்ச்சி. இந்த மருத்துவமனையின் பெருமையைப் பற்றி மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் சிறப்பாக தெரிவித்தார்கள். அவர் ஒரு மருத்துவராக இருக்கின்ற காரணத்தினாலேதான் விளக்கிப் பேசினார். நாங்கள் மருத்துவர்கள் இல்லை, முழுமையாக தெரிந்துகொள்ள முடியாது. அதனால் தான் நானும், துணை முதலமைச்சர் அவர்களும் அவரையே பேசச் சொன்னோம். மேலும், அவர் மருத்துவத் துறையிலே இருக்கின்ற காரணத்தினால்தான், இந்த மருத்துவமனை எந்தளவிற்கு சிறப்பாக விளங்க வேண்டுமென்பதற்காக, அவரோடு மருத்துவக்குழுவே வெளிநாடு சென்று, வெளிநாட்டில் இருக்கின்ற உயர்தர மருத்துவ சிகிச்சைகளை பார்த்து நம்முடைய மருத்துவமனையிலே அதை நடைமுறைப்படுத்த வேண்டுமென்ற நோக்கத்தோடு, அங்கே பார்வையிட்டதை எல்லாம் இன்றைக்கு நடைமுறைப்படுத்தியிருக்கின்றோம்.

ஆகவே, இது சிறப்பான ஒரு நிகழ்ச்சி, அதுமட்டுமல்ல, பிறந்த குழந்தைகளுக்கு இன்றைக்கு இருதய அறுவை சிகிச்சை செய்யக்கூடிய ஒரு உயர்தர மருத்துவமனையை நம் தமிழகத்திலே பெற்றிருக்கின்றோம். 837 படுக்கைகள் கொண்ட மருத்துவமனையாக திகழ்கின்றது. ஆகவே, இங்கே நம்முடைய ஏழை, எளிய தாய்மார்கள் பெற்றெடுக்கும் குழந்தைகள் ஏதாவது இருதய அறுவை சிகிச்சை செய்ய வேண்டுமென்று சொன்னால், சிகிச்சை பெறக்கூடிய சூழ்நிலையை நாம் உருவாக்கித் தந்திருக்கின்றோம்.

அதுமட்டுமல்லாமல், பெற்ற தாய்க்குத்தான் அந்தக் குழந்தையின் அருமை தெரியும். பிறந்த உடனேயே அந்தக் குழந்தை நோய்வாய்ப்பட்டால் மனம் உடைந்துவிடும். ஆகவே, அப்படிப்பட்ட ஏழைக் குடும்பத்தில் பிறந்த தாய்மார்கள் பிரசவிக்கின்ற குழந்தைகள் நலமோடு வாழ வேண்டும் என்பதற்காகத்தான் அம்மாவினுடைய அரசு தேவையான நிதி ஒதுக்கீடு செய்து நவீன கருவிகள் மூலமாக அறுவை சிகிச்சை செய்யப்பட்டு குணமடையக்கூடிய ஒரு சூழ்நிலையை நாங்கள் ஏற்படுத்திக் கொடுத்திருக்கின்றோம் என்பதை இந்த நேரத்திலே தெரிவித்து, இந்த மருத்துவமனை மேலும், மேலும் வளர்ந்து, ஏழை, எளிய, நம்முடைய தாய்மார்கள் பெற்றெடுக்கும்

குழந்தைகளுக்கு நல்ல அறுவை சிகிச்சை செய்து, தமிழகம் மட்டுமல்ல, இந்தியாவிலேயே ஒரு முதன்மை மருத்துவமனையாக திகழ வேண்டும் என்று வாழ்த்துக்களை தெரிவித்து, அதோடு இந்த மருத்துவமனைக்கு நேசக்கரம் நீட்டிய அப்பல்லோ மருத்துவமனை மருத்துவர்களுக்கும், அதேபோல, மலர் மருத்துவமனையிலுள்ள மருத்துவர்களும் இங்கே நம்முடைய மருத்துவர்களோடு இணைந்து பணியாற்றக்கூடிய சூழ்நிலையை உருவாக்கிய அந்த மருத்துவர்களுக்கும் என்னுடைய மனமாற, உளமாற நன்றியை இந்த நேரத்திலே தெரிவித்துக் கொள்கிறேன். அர்ப்பணிப்பு உணர்வோடு பணியாற்றுகின்ற மருத்துவர்களுக்கும் செவிலியர்களுக்கும் அவர்களோடு இணைந்து பணியாற்றிய மருத்துவத் துறை ஊழியர்களுக்கும் மனமாற, உளமாற பாராட்டுக்களை தெரிவித்து விடை பெறுகின்றேன். நன்றி, வணக்கம்.''

இந்த நிகழ்ச்சியில், மாண்புமிகு துணை முதலமைச்சர் திரு.ஓ. பன்னீர்செல்வம், மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் டாக்டர் சி. விஜயபாஸ்கர், மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள், நாடாளுமன்ற மற்றும் சட்டமன்ற உறுப்பினர்கள், தலைமைச் செயலாளர் முனைவர் கிரிஜா வைத்தியநாதன், இ.ஆ.ப., மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை முதன்மைச் செயலாளர் டாக்டர் ஜெ. ராதாகிருஷ்ணன், இ.ஆ.ப., தமிழ்நாடு மருத்துவ சேவை கழகத்தின் மேலாண்மை இயக்குநர் டாக்டர் உமாநாத், இ.ஆ.ப., மாநில நலவாழ்வு குழும இயக்குநர் டாக்டர் தாரேஸ் அகமத், இ.ஆ.ப., மருத்துவம் மற்றும் ஊரக நலப் பணிகள் இயக்குநர் டாக்டர் என். ருக்மணி, பொது சுகாதாரம் மற்றும் நோய் தடுப்பு மருந்து இயக்குநர் டாக்டர் கே. குழந்தைசாமி, எழும்பூர் – அரசு குழந்தைகள் நல இயக்குநர் மற்றும் கண்காணிப்பாளர் பேராசிரியர் டாக்டர் அரசர்சீராளர், டாக்டர் நெவில் சாலமன், டாக்டர் வேலு, அரசு உயர் அலுவலர்கள், பேராசிரியர்கள் மற்றும் மருத்துவ மாணவர்கள் கலந்து கொண்டனர்.

* * * * *

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**